**SHANMUGAM IAS ACADEMY**

# தந்தை பெரியார்

## முந்தைய ஆண்டு வினாக்கள் (2020 – 2026)

TNPSC குரூப் 1, 2, 4 மற்றும் பிற தேர்வுகள் · விடைகள் மற்றும் விளக்கங்களுடன்

**37 வினாக்கள்**

www.shanmugamiasacademy.in

ஒவ்வொரு வினாவின் தொடக்கத்திலும் [ ] அடைப்பில் தேர்வுப் பெயரும் ஆண்டும் கொடுக்கப்பட்டுள்ளன. முதலில் விடைகளைப் பார்க்காமல் முயன்று, பின் பகுதியில் உள்ள விடைகளுடன் சரிபார்க்கவும்.

## வினாக்கள்

**1.** AGGS-2021 **1925 ம் ஆண்டு ஈ.வெ.ராமசாமி காங்கிரஸிலிருந்து விலகியதற்குக் காரணம்:**
**1. இவரால் காந்திய கொள்கையை பின்பற்ற முடியவில்லை**
**2. காங்கிரஸ் முழுவதுமாக பிராமணத் தலைவர்களின் மேலாதிக்கத்தின் கீழ் இருந்தது**
**மேற்காணும் காரணங்களில் எவை சரியான காரணம் என எழுதுக.**

**(A)** 1 மட்டும்
**(B)** 2 மட்டும்
**(C)** 1 மற்றும் 2 இரண்டும்
**(D)** 1 மற்றும் 2 இரண்டுமில்லை

**2.** ADGS-2021 **சிறைப்பறவை என்ற அடைமொழி பெயர் கொண்டு அழைக்கப்பட்டவர்**

**(A)** பெரியார் ஈ.வே. ராமசாமி
**(B)** பாரதியார்
**(C)** சிவ சுப்பிரமணியம்
**(D)** பி. சுப்பராயன்

**3.** TNPSC-2022 **2021 ம் ஆண்டு தமிழக அரசு தந்தை பெரியாரின் பிறந்தநாளை ________ ஆகக் கொண்டாட முடிவு செய்துள்ளது.**

**(A)** பெண்கள் வளர்ச்சி நாள்
**(B)** தமிழ் விழிப்புணர்வு நாள்
**(C)** சமூக நீதி நாள்
**(D)** திராவிட நாள்

**4.** TNPSC-2022 **கூற்று (A): E.V. இராமசாமி 20-ம் நூற்றாண்டின் சிறந்த சமூக சீர்திருத்தவாதியாவார். காரணம் (R): அவர் சுயமரியாதை இயக்கத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட மக்களின் நலனைக் காக்க பாடுபட்டார்.**

**(A)** (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A)-விற்கான சரியான விளக்கமாகும்
**(B)** (A) சரி ஆனால் (R) தவறு
**(C)** (A) மற்றும் (R) இரண்டும் தவறு
**(D)** (A) மற்றும் (R) இரண்டும் சரி

**5.** TNPSC-2022 **கீழ்க்கண்ட கூற்றுகளில் E.V. இராமசாமி பற்றிய தவறான கூற்று எது?**

**(A)** E.V. இராமசாமி "வைக்கம் வீரர்" என அழைக்கப்படுகிறார்
**(B)** இவர் "குருகுல" கல்வி முறையை ஆதரித்தார்
**(C)** இவர் "சுயமரியாதை இயக்கத்தை" தோற்றுவித்தார்
**(D)** இவர் "சுயமரியாதை திருமணத்திற்கு" ஆதரவு தந்தார்

**6.** **SURVEYOR DRAFTSMAN-2022** காலவரிசைப்படி பட்டியலிடுக:

1. ஈவே ராமசாமி தலைமையில் நீதிக் கட்சி 'திராவிடர் கழகம்' என மாற்றி அமைக்கப்பட்டது
2. ஈவே ராமசாமி சிறையில் இருந்துக் கொண்டு நீதிக் கட்சி தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்
3. ஈவே ராமசாமி திராவிட நாடு மாநாடு நடத்தி அதில் சுதந்திர மற்றும் தனி திராவிட நாடு கோரிக்கை முன் வைத்தல்
4. மெட்ராஸ் சட்டசபை தேர்தலை காங்கிரஸ் கட்சி வென்றது.

**(A)** 1 3 2 4 **(B)** 3 4 1 2
**(C)** 4 2 3 1 **(D)** 2 1 3 4

---

**7.** **REPORTER-2022** ஈ.வே.ராமசாமியின் ஈரோட்டு திட்டம் கீழ்கண்டவைகளில் எதை கொண்டிருந்தது?

1. அனைவருக்கும் ஆயுள் காப்பீட்டு திட்டத்தை விரிவுபடுத்துதல்
2. அனைவருக்கும் கட்டாய இலவசக் கல்வி அளித்தல்
3. தீண்டாமை ஒழிப்பு
4. அத்தியாவசிய தொழில்களை நாட்டுடைமை ஆக்குதல்

**(A)** 1 மட்டும் **(B)** 2 மட்டும்
**(C)** 1, 2 மட்டும் **(D)** 1, 2, 3, 4

---

**8.** **EO-GIII-2022** "தெற்கிலிருந்து வந்த தீர்க்கதரிசி" என்று சிறப்பாக அழைக்கப்பட்டவர் யார்?

**(A)** இராஜாஜி **(B)** வ.உ. சிதம்பரம்
**(C)** பெரியார் ஈ.வெ. இராமசாமி **(D)** பாரதியார்

---

**9.** **EO-2022** கீழ்வருவனவற்றுள் ஈ.வெ.ரா பெரியாரை பற்றி எவை உண்மையான கூற்று?

(i) காதிவஸ்திராலயத்தை தோற்றுவிக்க காரணமானவர் ஈ.வெ.ரா. பெரியார்
(ii) நூற்பாலை சங்கத்தலைவராக பணியாற்றியவர் ஈ.வெ.ரா. பெரியார்
(iii) மாவட்ட குழுவில் உறுப்பினராக இருந்தார்
(iv) ஈரோடு முனிசிபல் கவுன்சிலில் தலைவராக இருந்தார்

**(A)** (i) மற்றும் (ii) மட்டும் **(B)** (i), (ii) மற்றும் (iii) மட்டும்
**(C)** (ii) மற்றும் (iii) மட்டும் **(D)** மேற்கண்ட அனைத்தும்

---

**10.** **GROUP-1-2022** பெரியாருடன் சம்பந்தப்பட்ட நிகழ்வுகளைக் கால வரிசைப்படி வரிசை படுத்தவும்.

1. வைக்கம் சத்தியாகிரகம்
2. ஒத்துழையாமை இயக்கம்
3. கள்ளுக்கடை மறியல்
4. சென்னை காங்கிரஸ் கமிட்டி தலைவர்

**(A)** 2, 3, 4, 1 **(B)** 2, 4, 3, 1
**(C)** 2, 1, 3, 4 **(D)** 4, 2, 3, 1

---

550/3, Dr Nanjappa Road, Gandhipuram, Coimbatore - 641012
☎ 99941 46662 / 99944 27714

**11.** GROUP-1-2021, ADGS-2021, Forest Apprentice (G-6)-2022 **தந்தை பெரியார் சுயமரியாதை மாநாட்டில் பெண்களின் நலனுக்காக திட்டங்கள் இயற்றப்பட்ட இடம்**

**(A)** மெட்ராஸ் **(B)** கோயம்பத்தூர்

**(C)** சேலம் **(D)** செங்கல்பட்டு

**12.** GROUP-1-2021 **"மனிதன் சுதந்திரமாக பிறக்கிறான், சுய மரியாதை அவனின் பிறப்புரிமை, சமூகநீதி சமூக சமத்துவத்தை உறுதிப்படுத்தும்" என்று கூறியவர் யார்?**

**(A)** தந்தை பெரியார் **(B)** பாலகங்காதர திலகர்

**(C)** காமராஜ் **(D)** ஓமந்தூராரர்

**13.** GROUP-1-2021 **தந்தை பெரியாரின் ஆதரவுடன் முதலமைச்சர் ஒருவர் இவ்வாறு சவால் விடுத்தார்: "தாழ்ந்த சாதி மருத்துவர் தவறாக ஊசி போட்டதால் இறந்த ஒரு மனிதரை என்னிடம் காண்பிக்கவும் அல்லது தாழ்ந்த சாதி பொறியாளரால் தகர்ந்து போன ஓர் கட்டிடத்தை என்னிடம் காண்பிக்கவும்." இவ்வாறு கூறியவர் யார்?**

**(A)** ஓமந்தூர் இராமசாமி **(B)** காமராஜர்

**(C)** அறிஞர் அண்ணா **(D)** கலைஞர் மு. கருணாநிதி

**14.** GROUP-1-2021 **தந்தை பெரியார், மக்கள் தங்கள் உயிருக்கு ஒப்பாக எண்ண வேண்டும் என விரும்பியது**

**(A)** தாய் நாட்டின் விடுதலை **(B)** குடும்ப கவுரவம்

**(C)** சுய மரியாதை **(D)** பகுத்தறியும் திறன்

**15.** ACF-2023 **_________ சோவியத் யூனியன் பயணத்தின் மூலம் அந்நாடு ஐந்தாண்டுத் திட்டங்கள் மற்றும் நவீன அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் மூலம் அடைந்த அதிவேக வளர்ச்சியைப் பார்த்து வியந்தார்.**

**(A)** சிங்காரவேலர் **(B)** ஜீவானந்தம்

**(C)** பண்டித ஜவஹர்லால் நேரு **(D)** E.V. இராமசாமி

**16.** CSSE-2023 **'ரிவோல்ட்' என்னும் ஆங்கிலப் பத்திரிக்கையை ஈ.வே.ரா. பெரியார் தொடங்கிய ஆண்டு எது?**

**(A)** 1925 **(B)** 1928

**(C)** 1933 **(D)** 1934

**17.** CSSE-2023 **'பெண் ஏன் அடிமையானாள்' என்ற நூலின் ஆசிரியர் யார்?**

**(A)** சிங்காரவேலர் **(B)** முத்துலட்சுமி அம்மையார்

**(C)** பெரியார் **(D)** நீலாம்பிகை அம்மையார்

**18.** VETERINARY ASSISTANT-2023 **'தமிழ் நாட்டின் ரூசோ' என்று அழைக்கப்படுபவர்**

**(A)** ராஜாஜி **(B)** சத்தியமூர்த்தி

**(C)** சி.என். அண்ணாதுரை **(D)** தந்தை பெரியார்

**19.** **LIBRARY-2023** **ஈ.வெ. இராமசாமி பெரியார் காங்கிரஸ் கட்சியிலிருந்து ஏன் விலகினார்?**

**(A)** காந்தியுடன் கொண்டிருந்த முரண்பாடு
**(B)** சி. இராஜகோபாலாச்சாரியுடன் கொண்டிருந்த முரண்பாடு
**(C)** காங்கிரஸ் நடத்திய பள்ளியில் பிராமணருக்கும் பிராமணர் அல்லாதவருக்கும் தனித்தனியே உணவுப் பந்தியிட்டது
**(D)** வ.வே.சு அய்யரிடம் கொண்ட முரண்பாடு

**20.** **CESGS-2023** **பெரியார் ஈ.வெ.ராவுடன் தொடர்பு இல்லாத இதழ் ________ ஆகும்.**

**(A)** குடிஅரசு
**(B)** புரட்சி
**(C)** தேசபக்தன்
**(D)** ரிவோல்ட்

**21.** **CESGS-2023, CESS-2023** **பின்வருவனவற்றுள் சரியான கூற்றைத் தேர்ந்தெடு**
**1. பெரியார் இந்திய தேசிய காங்கிரஸின் உறுப்பினராக ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்து கொண்டார்**
**2. சுயமரியாதைத் திருமணத்தை நீதிக்கட்சி அறிமுகப்படுத்தியது**
**3. பெரியார் பட்டத்தை வழங்கியது UNESCO அமைப்பு**
**4. விடுதலை பத்திரிக்கையை ஆங்கிலத்தில் நடத்தினார்**

**(A)** 1 மட்டும் சரி
**(B)** 2 மற்றும் 4 சரி
**(C)** 1 மற்றும் 2 சரி
**(D)** 2, 3, 4 சரி

**22.** **JA-2023** **1944ம் ஆண்டு _______ ல் நடைபெற்ற மாநாட்டில் நீதிக்கட்சி என்ற பெயர் திராவிடக் கழகம் என்று மாற்றப்பட்டது**

**(A)** திருச்சி
**(B)** சேலம்
**(C)** விருதுநகர்
**(D)** ஈரோடு

**23.** **Research Assistant-2023** **_______ -இன் விளைவாகத் திருவாங்கூர் மகாராஜா திருவாங்கூரில் கோயில் நுழைவுப் பிரகடனத்தை வெளியிட்டார்.**

**(A)** சம்பாரண் சத்தியாகிரகம்
**(B)** பர்தோலி சத்தியாகிரகம்
**(C)** சாணார் கலகம்
**(D)** வைக்கம் சத்தியாகிரகம்

**24.** **Junior Analyst-2023** **ஈ.வே.ரா பெரியார் திராவிட கழகத்தை துவக்கிய ஆண்டு**

**(A)** 1944
**(B)** 1945
**(C)** 1947
**(D)** 1951

**25.** **Combined Accounts-2024, CAGS-2022** **ஈ.வெ.ரா. பெரியார் எப்போது திராவிடநாடு கோரிக்கையை முன்வைத்தார்?**

**(A)** 1934
**(B)** 1939
**(C)** 1949
**(D)** 1969

**26.** Combined Accounts-2024 **பின்வருவனவற்றுள் பெரியார் ஆதரவு அளிக்காதது எது?**

**(A)** கணவனுக்கு மரியாதை
**(B)** சாதி, மத தொடர்பான சடங்குகளை மீறுதல்
**(C)** மங்கள சூத்திரத்தை மறுதலித்தல்
**(D)** குழந்தைப் பராமரிப்பில் கணவன்–மனைவிக்கு சமப்பொறுப்பு

---

**27.** Group 2 & 2A-2024 **ஈ.வெ.ரா. பற்றி கால வரிசைப்படி பின்வரும் நிகழ்வுகளை ஒழுங்கமைக்கவும்.**
**(1) அவர் நீதிக் கட்சியின் தலைவர் ஆனார்**
**(2) அவர் காங்கிரஸில் சேர்ந்தார்**
**(3) அவர் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் ஆனார்**
**(4) வைக்கம் சத்தியாகிரகம் துவக்கினார்**

**(A)** (2), (4), (3), (1)
**(B)** (4), (1), (3), (2)
**(C)** (2), (3), (4), (1)
**(D)** (3), (1), (4), (2)

---

**28.** Group 1-2024 **ஐக்கிய நாடுகள் மன்றத்தின் நிறுவனமான 'யுனெஸ்கோ' அமைப்பினால் "தென்கிழக்கு ஆசியாவின் சாக்ரடீஸ்" என்று சான்றளிக்கப்பட்ட தலைவர் யார்?**

**(A)** அறிஞர் அண்ணா
**(B)** கர்மவீரர் காமராஜர்
**(C)** இராஜாஜி
**(D)** ஈ.வெ. இராமசாமி

---

**29.** Group 1B & 1C-2024 **கீழ்காண்பவற்றுள் பெரியார் ஈ.வே.ரா. பற்றிய உண்மையான கூற்றினை கூறு.**
**(i) ஈ.வெ.ரா. தமிழர்களுக்கு எதிராக ஒரு பெரிய தாக்குதலை நடத்த சிங்களவர்களை ஊக்கப்படுத்தினார்.**
**(ii) இவர் தீண்டாமை, சமத்துவமின்மை மற்றும் பாலின அடிப்படையிலான வேறுபாடுகளின் தீமைகளை ஒழிக்கப் பாடுபட்டார்.**
**(iii) இவர் ஜாதி, மத நிறுவனங்கள் மற்றும் ஜமீன்தாரி முறையையும் ஒழிக்க பாடுபட்டார்.**

**(A)** (ii) மற்றும் (iii) மட்டும்
**(B)** (i) மற்றும் (iii) மட்டும்
**(C)** (i) மற்றும் (ii) மட்டும்
**(D)** (ii) மட்டும்

---

**30.** APP Grade II-2025 **"கு. காமராஜ் முதலமைச்சர் பதவியிலிருந்து விலகுதல் அரசியல் தற்கொலையாகும்" என்று எச்சரிக்கை விடுத்தது யார்?**

**(A)** C. இராஜகோபாலச்சாரி
**(B)** E.V. இராமசாமி
**(C)** லால் பகதூர் சாஸ்திரி
**(D)** ஜவஹர்லால் நேரு

---

**31.** APP Grade II-2025 **பின்வருவனவற்றில் E.V. இராமசாமி அவர்களைப் பற்றிய நிகழ்வுகளை காலவரிசைப்படுத்துக:**
**(1) சுயமரியாதை இயக்கம் துவக்கம்**
**(2) நீதிக்கட்சியின் தலைவராதல்**
**(3) வைக்கம் சத்தியாகிரகத்தில் பங்கெடுப்பு**
**(4) தனி திராவிட நாடு கோரிக்கை**

**(A)** (2), (1), (4), (3)
**(B)** (3), (1), (4), (2)
**(C)** (3), (1), (2), (4)
**(D)** (1), (2), (3), (4)

---

**32.** APP Grade II-2025 பொருத்துக:

(a) தமிழ்நாட்டின் ரூசோ - 1. டி.எம். நாயர்

(b) தட்சிண காந்தி - 2. ச. இராஜாஜி

(c) ஆங்கில பித்தர் - 3. எம்.என். சுப்புராமன்

(d) மதுரை காந்தி - 4. பெரியார் ஈ.வே. இராமசாமி

**(A)** 4 2 1 3
**(B)** 4 2 3 1
**(C)** 2 4 1 3
**(D)** 2 4 3 1

---

**33.** Special Competitive-2025 பெரியார் ஈ.வெ.ரா. தொடங்கிய செய்தித் தாள்கள் மற்றும் இதழ்களை, தொடங்கிய வருடத்துடன் பொருத்துக:

(a) குடி அரசு - 1. 1935

(b) புரட்சி - 2. 1925

(c) பகுத்தறிவு - 3. 1934

(d) விடுதலை - 4. 1933

**(A)** 2 4 3 1
**(B)** 2 4 1 3
**(C)** 4 2 1 3
**(D)** 1 4 3 2

---

**34.** Special Competitive-2025, EO-G3-2022 உப்புச் சட்டங்களை மீறியதற்காக அபராதம் கட்டிய முதல் பெண்மணி

**(A)** தர்மாம்பாள்
**(B)** ருக்மணி லட்சுமிபதி
**(C)** முத்துலட்சுமி அம்மையார்
**(D)** மூவலூர் ராமாமிர்தம்

---

**35.** Group 1 & 1A-2025 கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றிலிருந்து சரியாகப் பொருந்திய இணைகளைக் கண்டுபிடித்து, கொடுக்கப்பட்ட குறியீட்டிலிருந்து சரியான பதிலைத் தேர்ந்தெடுக்கவும்.

(1) 1925 – பெரியார் ஈ.வெ.ரா. 'குடி அரசு' என்ற பருவ இதழைத் தொடங்கினார்.

(2) 1928 – ஆங்கில பருவ இதழ் 'ரிவோல்ட்' தொடங்கப்பட்டது

(3) 1934 – பெரியார் 'விடுதலை'யைத் தமிழ் நாளிதழாக வெளியிட்டார்

(4) 1937 – பெரியார் 'பகுத்தறிவு' என்ற தமிழ் வார இதழை வெளியிட்டார்

**(A)** (1) மற்றும் (2) மட்டும் சரி
**(B)** (1) மற்றும் (3) மட்டும் சரி
**(C)** (1) மற்றும் (4) மட்டும் சரி
**(D)** (1), (2) மற்றும் (4) மட்டும் சரி

---

**36.** Group 1 & 1A-2025 கூற்று [A]: தமிழ்நாடு பெண்கள் மாநாடு 13.11.1938-ல் தி. நீலாம்பிகை அம்மையார் தலைமையில் சென்னையில் நடைபெற்றது.

காரணம் [R]: இந்த மாநாட்டில் சாதிய வேற்றுமையை ஒழிப்பதற்கும் ஈ.வெ. ராமசாமிக்குப் "பெரியார்" பட்டம் வழங்குவதற்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**(A)** [A] சரி, [R] தவறு
**(B)** [A] தவறு, [R] தவறு
**(C)** [A] தவறு, [R] சரி, ஆனால் [R] என்பது [A]-க்கான சரியான விளக்கம் அல்ல
**(D)** [A] சரி, [R] சரி

---

**37.** Combined Technical Service-2025 **கூற்று: பெரியார் E.V. ராமசாமி, சாதி ஒழிப்புக்காக தமிழ்நாட்டிற்கு வெளியேயும் சுற்றுப் பயணங்கள் மேற்கொண்டுள்ளார்.**

**காரணம்: 1944, 1959 ஆகிய ஆண்டுகளில் பம்பாயிலும், தில்லியிலும் சாதி ஒழிப்பு முழக்கங்களை எழுப்பிப் பாராட்டுதலைப் பெற்றார்.**

**(A)** கூற்று சரி, காரணம் தவறு

**(B)** கூற்று காரணம் இரண்டும் சரி, மேலும் காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்

**(C)** கூற்று தவறு, காரணம் சரி

**(D)** கூற்று காரணம் இரண்டும் சரி ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை என்பது சரி

# விடைகள் மற்றும் விளக்கங்கள்

**1. (B) 2 மட்டும்**

காங்கிரஸ் பிராமணத் தலைவர்களின் ஆதிக்கத்தில் இருந்ததும், வகுப்புவாரி பிரதிநிதித்துவக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதுமே பெரியார் விலகக் காரணம்; அவர் காந்திய கொள்கைகளான கதர், மதுவிலக்கு போன்றவற்றைத் தீவிரமாகப் பின்பற்றியவர்.

**2. (A) பெரியார் ஈ.வே. ராமசாமி**

பல்வேறு போராட்டங்களுக்காகப் பலமுறை சிறை சென்றதால் பெரியார் 'சிறைப்பறவை' என்று அழைக்கப்பட்டார்.

**3. (C) சமூக நீதி நாள்**

2021 முதல் பெரியாரின் பிறந்தநாளான செப்டம்பர் 17 தமிழக அரசால் 'சமூக நீதி நாள்' ஆகக் கொண்டாடப்படுகிறது.

**4. (A) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A)-விற்கான சரியான விளக்கமாகும்**

ஒடுக்கப்பட்ட மக்களின் சுயமரியாதையையும் உரிமைகளையும் காக்க 1925-இல் சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கியதால் பெரியார் 20-ஆம் நூற்றாண்டின் தலைசிறந்த சமூக சீர்திருத்தவாதியாகக் கருதப்படுகிறார்.

**5. (B) இவர் "குருகுல" கல்வி முறையை ஆதரித்தார்**

சேரன்மாதேவி குருகுலத்தில் பிராமண, பிராமணரல்லாத மாணவர்களுக்குத் தனித்தனியே உணவு பரிமாறப்பட்டதைப் பெரியார் கடுமையாக எதிர்த்தார்; எனவே அவர் குருகுல முறையை ஆதரித்தார் என்பது தவறு.

**6. (C) 4 2 3 1**

காங்கிரஸ் சென்னை சட்டமன்றத் தேர்தலில் வென்றது (1937), சிறையில் இருந்தபோது பெரியார் நீதிக்கட்சித் தலைவரானார் (1938), திராவிட நாடு மாநாடு (1939), நீதிக்கட்சி திராவிடர் கழகமானது (1944).

**7. (D) 1, 2, 3, 4**

1932-இல் வகுக்கப்பட்ட ஈரோடு திட்டம் (சமதர்மத் திட்டம்) தீண்டாமை ஒழிப்பு, அனைவருக்கும் கல்வி, ஆயுள் காப்பீடு, முக்கியத் தொழில்களை நாட்டுடைமையாக்குதல் உள்ளிட்ட சமதர்மக் கொள்கைகளைக் கொண்டிருந்தது.

**8. (C) பெரியார் ஈ.வெ. இராமசாமி**

1970-இல் யுனெஸ்கோ வழங்கிய பாராட்டுரையில் பெரியார் 'புதிய யுகத்தின் தீர்க்கதரிசி, தென்கிழக்கு ஆசியாவின் சாக்ரடீஸ்' எனப் போற்றப்பட்டார்.

**9. (D) மேற்கண்ட அனைத்தும்**

காங்கிரஸில் இருந்தபோது பெரியார் கதர் வஸ்திராலயம் அமைக்கக் காரணமாக இருந்தார், நூற்போர் சங்கத் தலைவர், மாவட்டக் கழக உறுப்பினர், ஈரோடு நகராட்சித் தலைவர் ஆகிய பொறுப்புகளையும் வகித்தார்.

**10. (A) 2, 3, 4, 1**

ஒத்துழையாமை இயக்கம் (1920), ஈரோட்டில் கள்ளுக்கடை மறியல் (1921), சென்னை மாகாண காங்கிரஸ் கமிட்டித் தலைவர் (1922), வைக்கம் சத்தியாகிரகம் (1924) என்பது சரியான வரிசை.

**11. (D) செங்கல்பட்டு**

1929 செங்கல்பட்டு சுயமரியாதை மாநாட்டில் பெண்களுக்குச் சொத்துரிமை, விவாகரத்து உரிமை, திருமண வயது உயர்வு போன்ற பெண்கள் நலத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**12. (A) தந்தை பெரியார்**

சுயமரியாதையையும் சமூகநீதியையும் வலியுறுத்திய இக்கூற்று தந்தை பெரியாருடையது.

**13. (B) காமராஜர்**

பெரியாரின் ஆதரவைப் பெற்ற முதலமைச்சர் காமராஜர், இட ஒதுக்கீட்டை எதிர்த்தவர்களுக்குப் பதிலாக இச்சவாலை விடுத்தார்.

**14. (C) சுய மரியாதை**

மக்கள் சுயமரியாதையைத் தங்கள் உயிரினும் மேலாகக் கருத வேண்டும் என்பதே பெரியாரின் அடிப்படைக் கொள்கை.

**15. (D) E.V. இராமசாமி**

1931-32-இல் சோவியத் யூனியனுக்குப் பயணம் செய்த பெரியார், ஐந்தாண்டுத் திட்டங்களாலும் அறிவியல் தொழில்நுட்பத்தாலும் அந்நாடு அடைந்த விரைவான வளர்ச்சியைக் கண்டு வியந்தார்.

**16. (B) 1928**

சுயமரியாதைக் கருத்துகளை ஆங்கிலம் அறிந்தோரிடம் பரப்ப பெரியார் 1928-இல் 'ரிவோல்ட்' ஆங்கில இதழைத் தொடங்கினார்.

**17. (C) பெரியார்**

'பெண் ஏன் அடிமையானாள்' என்ற நூலை எழுதியவர் பெரியார்; இது பெண் அடிமைத்தனத்தின் காரணங்களை ஆராய்கிறது.

**18. (D) தந்தை பெரியார்**

சமத்துவம், சுதந்திரம், பகுத்தறிவுக் கருத்துகளால் சமூகத்தைத் தட்டியெழுப்பியதால் தந்தை பெரியார் 'தமிழ்நாட்டின் ரூசோ' என அழைக்கப்படுகிறார்.

**19. (C) காங்கிரஸ் நடத்திய பள்ளியில் பிராமணருக்கும் பிராமணர் அல்லாதவருக்கும் தனித்தனியே உணவுப் பந்தியிட்டது**

காங்கிரஸ் நிதியுதவி பெற்ற சேரன்மாதேவி குருகுலத்தில் பிராமண, பிராமணரல்லாத மாணவர்களுக்குத் தனித்தனியே உணவு பரிமாறப்பட்டது பெரியார் காங்கிரஸிலிருந்து விலகிய முக்கியக் காரணங்களில் ஒன்று.

**20. (C) தேசபக்தன்**

குடிஅரசு, புரட்சி, ரிவோல்ட் ஆகியவை பெரியார் நடத்திய இதழ்கள்; 'தேசபக்தன்' திரு.வி.க. ஆசிரியராக இருந்த இதழ்.

**21. (A) 1 மட்டும் சரி**

பெரியார் காங்கிரஸ் உறுப்பினராக ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்றார். சுயமரியாதைத் திருமணம் சுயமரியாதை இயக்கத்தால் அறிமுகமானது; 'பெரியார்' பட்டத்தை 1938-ல் தமிழ்நாடு பெண்கள் மாநாடு வழங்கியது; 'விடுதலை' தமிழ் இதழாகும்.

**22.** **(B) சேலம்**

1944 ஆகஸ்ட் 27 அன்று சேலத்தில் நடைபெற்ற நீதிக்கட்சி மாநாட்டில் அதன் பெயர் திராவிடர் கழகம் என மாற்றப்பட்டது.

**23.** **(D) வைக்கம் சத்தியாகிரகம்**

வைக்கம் சத்தியாகிரகம் (1924–25) உருவாக்கிய விழிப்புணர்வின் தொடர்ச்சியாக 1936-ல் திருவாங்கூர் மகாராஜா கோயில் நுழைவு பிரகடனத்தை வெளியிட்டார்.

**24.** **(A) 1944**

1944-ல் சேலம் மாநாட்டில் நீதிக்கட்சியைத் திராவிடர் கழகமாக மாற்றி பெரியார் அதைத் தொடங்கினார்.

**25.** **(B) 1939**

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைத் தொடர்ந்து 1939-ல் பெரியார் 'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற தனிநாடு கோரிக்கையை முன்வைத்தார்.

**26.** **(A) கணவனுக்கு மரியாதை**

பெரியார் ஆண்–பெண் சமத்துவத்தை வலியுறுத்தினார்; மனைவி கணவனுக்கு அடிபணிந்து மரியாதை செலுத்த வேண்டும் என்ற கருத்தை அவர் ஏற்கவில்லை.

**27.** **(C) (2), (3), (4), (1)**

பெரியார் 1919-ல் காங்கிரஸில் சேர்ந்தார்; 1922-ல் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரானார்; 1924-ல் வைக்கம் சத்தியாகிரகத்தில் ஈடுபட்டார்; 1938-ல் நீதிக்கட்சித் தலைவரானார்.

**28.** **(D) ஈ.வெ. இராமசாமி**

1970-ல் யுனெஸ்கோ அமைப்பு பெரியார் ஈ.வெ. இராமசாமியை 'தென்கிழக்கு ஆசியாவின் சாக்ரடீஸ்' எனப் பாராட்டி விருது வழங்கியது.

**29.** **(A) (ii) மற்றும் (iii) மட்டும்**

பெரியார் தீண்டாமை, பாலின ஏற்றத்தாழ்வு, சாதி, மத நிறுவனங்கள், ஜமீன்தாரி முறை ஆகியவற்றை ஒழிக்கப் பாடுபட்டார்; சிங்களவர்களைத் தமிழர்களுக்கு எதிராகத் தூண்டியதாகக் கூறுவது தவறு.

**30.** **(B) E.V. இராமசாமி**

1963-ல் காமராஜ் திட்டத்தின் கீழ் காமராஜர் முதலமைச்சர் பதவியிலிருந்து விலக முடிவு செய்தபோது, அது அரசியல் தற்கொலை என்று பெரியார் எச்சரித்தார்.

**31.** **(C) (3), (1), (2), (4)**

வைக்கம் சத்தியாகிரகம் 1924, சுயமரியாதை இயக்கம் 1925, நீதிக்கட்சித் தலைமை 1938, தனி திராவிட நாடு கோரிக்கை 1939.

**32.** **(A) 4 2 1 3**

பெரியார் 'தமிழ்நாட்டின் ரூசோ' எனவும், என்.எம்.ஆர். சுப்புராமன் 'மதுரை காந்தி' எனவும் அழைக்கப்பட்டனர்; (a)-4, (d)-3 என்ற இரண்டையும் கொண்ட ஒரே விடை (A) மட்டுமே.

**33.** **(A) 2 4 3 1**

குடி அரசு 1925, புரட்சி 1933, பகுத்தறிவு 1934, விடுதலை 1935 ஆகிய ஆண்டுகளில் பெரியாரால் தொடங்கப்பட்டன.

**34. (B) ருக்மணி லட்சுமிபதி**

1930 வேதாரண்யம் உப்புச் சத்தியாகிரகத்தில் பங்கேற்று, உப்புச் சட்டத்தை மீறியதற்காக அபராதம் செலுத்திய முதல் பெண்மணி ருக்மணி லட்சுமிபதி ஆவார்.

**35. (A) (1) மற்றும் (2) மட்டும் சரி**

குடி அரசு 1925-லும் ஆங்கில இதழ் ரிவோல்ட் 1928-லும் தொடங்கப்பட்டன. விடுதலை 1935-ல் தொடங்கி 1937-ல் நாளிதழானது; பகுத்தறிவு 1934-ல் தொடங்கப்பட்டது.

**36. (D) [A] சரி, [R] சரி**

1938 நவம்பர் 13 அன்று சென்னையில் நீலாம்பிகை அம்மையார் தலைமையில் நடைபெற்ற தமிழ்நாடு பெண்கள் மாநாட்டில்தான் ஈ.வெ.ரா.வுக்கு 'பெரியார்' பட்டம் வழங்கப்பட்டது.

**37. (B) கூற்று காரணம் இரண்டும் சரி, மேலும் காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்**

பெரியார் 1944, 1959 ஆகிய ஆண்டுகளில் வட இந்தியாவுக்குப் பயணம் செய்து லக்னோ போன்ற இடங்களில் நடைபெற்ற பிற்படுத்தப்பட்டோர், தீண்டத்தகாதோர் மாநாடுகளில் சாதி ஒழிப்பு குறித்து உரையாற்றினார்; இப்பயணங்களே கூற்றை விளக்குகின்றன.